**<u>IN THE COURT OF THE ADDITIONAL DISTRICT MUNSIF, ATTUR</u>**

**O.S. No.32/2015**

Deposition of **<u>D.W.2</u>** witnesses for Plaintiff/Defendant Solemnly affirmed by Tmt. A.Tamilselvi, Gr. III Bench Clerk of this court, on 08.01.2025 in accordance with the provisions of Act 1 of 1873.

Name : ராஜேந்திரன் Father's Name : நடேசன்

துவக்க நேரம் : 11.34 A.M.

சாட்சி முன்னிலையானார், உறுதிமொழி செய்து வைக்கப்பட்டார்.

<u>வாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை:</u>

1) நான் தாக்கல் செய்துள்ள நிரூபண வாக்குமூலத்தில் படித்துப்பார்த்துவிட்டுதான் கையெழுத்து செய்தேன் என்றால் ஆமாம். அந்த நிரூபண வாக்குமூலத்தில் அந்த வழக்கு விவரங்கள் முழுவதும் எனக்கு தெரியும் என்று சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். நான் மேற்படி வழக்கில் 3-ஆம் நபர் சாட்சியாவேன் என்று சொல்லியுள்ளேன் என்றால் சரிதான்.

2. தாவா வண்டிப்பாதை எந்த திசையில் செல்கிறது என்றால் கிழமேலாக செல்லும் தார்சாலையிலிருந்து தென்வடலாக செல்கிறது. மேற்படி பாதைதான் வழக்கிற்கான வண்டிப்பாதை என்றால் சரிதான். எனக்கு வாதியின் நிலத்திற்கு வடபுறம் நிலம் உள்ளதாகவும், தாவா வண்டிப்பாதையைதான் பயன்படுத்தி வருகிறேன் என்றும் எனது முதன்மை சாட்சியத்தில் சொல்லியுள்ளேன் என்றால் சரிதான்.

Typed by Tmt. L. Kalaiselvi - O.S. No.32/2015 , Dt.08.01.2025.

3. தாவா வண்டிப்பாதையை நான் பயன்படுத்துவதாக சொல்லியுள்ள நிலையில் நான் இந்த வழக்கில் தரப்பினராக சேர்ந்துள்ளேனா என்றால் இல்லை. தாவா வண்டிப்பாதையை நான் பயன்படுத்தி வந்திருந்தால் இந்த வழக்கில் நான் ஒரு தரப்பனிராக சேர்ந்திருப்பேன் என்றாலும், தாவா வண்டிப்பாதையை நான் பயன்படுத்தாததால் தான் தரப்பினராக சேரவில்லை என்றாலும், பிரதிவாதிகள் கேட்டுக்கொண்டதன் பேரில் அவர்களுக்கு சாதகமாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றாலும் சரியல்ல. என்னுடைய நிலத்தை நான் கிரயம் பெற்று 40 ஆண்டுகளாகிறது. இந்த 40 ஆண்டுகாலமாக தாவா வண்டிப்பாதையில்தான் நான் சென்று வருகிறேன்.

4. நான் 40 ஆண்டுகளுக்கு முன்பு நான் நிலம் வாங்கியதாக சொல்வது பொய் என்றால் சரியல்ல, கிரயம் வாங்கியதற்கான ஆவணம் எதுவும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான், என்னிடம் வீட்டில் உள்ளது வேண்டுமென்றால் கொடுக்கிறேன். 40 ஆண்டுகளுக்கு முன்பு வண்டிப்பாதையில் மாட்டுவண்டி மட்டும்தான் செல்லும் என்றால் மாட்டுவண்டியும் செல்லும், டிராக்டரும் செல்லும்.

5. வாதியின் தகப்பனார் எனக்கு முன்பாகவே அந்த இடத்தில் நிலத்தை கிரயம் வாங்கினார் என்றால் ஆமாம். நான் எதுவரை படித்துள்ளேன் என்றால் 10-ஆம் வகுப்பு வரை படித்துள்ளேன். தாவா சொத்தை வாங்கியவர் யார் என்றால் பெயர் ஞாபகம் இல்லை,

Typed by Tmt. L. Kalaiselvi - O.S. No.32/2015 , Dt.08.01.2025.

கருப்பண்ண கவுண்டரிமிருந்து வாங்கினார். வாங்கியவர் பட்டப்பெயர் கோமாளிக்கவுண்டர் என்று சொல்வார்கள்.

6. எனக்கு முன்பாக தாவா சொத்தை வாங்கியவர் பெயர் கோமாளிக்கவுண்டர் என்று எனது முதன்மை சாட்சியத்தில் சொல்லியுள்ளேனா என்றால் இல்லை. கருப்பண்ணக்கவுண்டருக்கு மொத்தம் எவ்வளவு நிலம் இருந்தது என்று தெரியுமா என்றால் தெரியாது. கருப்பண்ணக்கவுண்டர் யார் யாருக்கு நிலம் விற்பனை செய்தார் என்று எனக்கு தெரியுமா என்றால் தெரியும், சின்னாக்கவுண்டருக்கும், முத்துக்கவுண்டருக்கும், கோமாளிக்கவுண்டருக்கும் நிலத்தை விற்பனை செய்தார். யார் யாருக்கு எவ்வளவு நிலத்தை விற்பனை செய்தார் என்ற விவரம் தெரியுமா என்றால் சரியாக தெரியவில்லை.

7. கருப்பண்ணக்கவுண்டர் அவரது நிலங்களை விற்பனை செய்த கிரய ஆவணங்களை பார்த்துள்ளேனா என்றால் பாத்தது இல்லை. வாதி கடந்த வருடம் கிழங்கு புடுங்கிய நிலையில் சேறும், சகதியுமாக இருந்ததா என்றால் இல்லை, கிழங்கு வண்டியை போகவிடாமல் தடுத்தார்கள் என்றால் ஆமாம், சாட்சி மீண்டும் இல்லை என்று சொல்கிறார்.

8. தடுக்கப்பட்ட வண்டி குறித்து நீதிமன்றத்தில் சொல்லி, நீதிமன்றத்தின் வாய்மொழி உத்தரவின்பேரில் வட்டாட்சியரும், கெங்கவல்லி காவல் உதவி ஆய்வாளரும் தாவா சொத்திற்கு நேரடியாக சென்று பேசியபிறகுதான் கிழங்கு ஏற்றிய லாரி கிழங்கு மில்லுக்கு புறப்பட்டு

சென்றது என்றால் ஆமாம். ஆனால் நீதிமன்றம் உத்தரவின்பேரில் வந்தார்கள் என்று எனக்கு தெரியாது.

9. தாவா சொத்தின் கிழபுறத்தில் ஒரு ஓடை சென்றது என்றால் ஆமாம். அந்த ஓடை தற்பொழுது உள்ளதா என்றால் ஓடை இல்லை, அது தடமாக மாற்றப்பட்டுள்ளது. ஓடையாக இருந்து தடமாக மாற்றப்பட்ட இடத்தின் சர்வே எண் தெரியுமா என்றால் தெரியாது. நான் சொல்லும் இந்த தடத்திற்கு கிழக்கில் யாருக்கு நிலம் உள்ளது என்றால் கந்தசாமி என்பவருக்கு நிலம் உள்ளது, இந்த வழக்கில் அவர் தரப்பினராக உள்ளாரா என்றால் உள்ளார்.

10. ஓடை எவ்வளவு அகலம் இருக்குமென்றால் 20 அடியிலிருந்து 25 அடி அகலம் இருக்கும். ஓடையாக இருப்பதெல்லாம் அரசுக்கு சொந்தமானது என்றால் சரிதான். ஓடையை சமப்படுத்தி தற்பொழுது பாதையாக உள்ளது என்றால் ஓடையை நாங்கள் சமப்படுத்தவில்லை. வாதியின் தந்தை பழனியப்பக்கவுண்டர் கிரயம் பெற்ற சொத்து அவருக்கு பாத்தியப்பட்டது என்றால் ஆமாம்.

11. அந்த இடத்தில் கருப்பண்ண கவுண்டருக்கு மொத்தமாக ஏக்.3.89 நிலம் இருந்தது என்றாலும், இதில் வாதியின் தந்தை பழனியப்பக்கவுண்டர் ஏக்.2.81 நிலம் கிரயம் பெற்றுள்ளார் என்றாலும், தனியாக அவர் கிரயம் பெற்ற ஆவணத்திலேயே 7 செண்ட்டிற்கு நிலம் தடத்திற்காக ஒதுக்கப்பட்டு கிரயம் பெற்றுள்ளார் என்றாலும் சாட்சி, கிரய ஆவணத்தை

(வா.சா.ஆ-1) பார்த்துவிட்டு ஆமாம் என்று பதிலளிக்கிறார். வாதியின் தந்தை கிரயம் பெற்ற ஏக்.2.81 நிலத்தை வாதி அனுபவிப்பதில் எனக்கு எந்த வித ஆட்சேபனையும் இல்லை என்றால் சரிதான்.

வாதிகள் தரப்பு குறுக்கு விசாரணை முழுவதும் முடித்துக்கொள்வதாக தெரிவிக்கப்பட்டது.

முடிவு நேரம்: 12.10 P.M.

Taken down before / by me in open court and read over / interpreted to the witness and acknowledged by him / to be correct

sd/-S.Munusamy
Additional District Munsif(F.A.C), Attur

Typed by Tmt. L. Kalaiselvi - O.S. No.32/2015 , Dt.08.01.2025.